

பிரதமர் மோடி சென்னை வண்ணாரப்பேட்டை–விம்கோ நகர் இடையே மெட்ரோ ரெயில் சேவை திட்டத்தை தொடங்கி வைத்ததும் முதல் ரெயிலை பெண் ஒட்டுனர் ரீனா இயக்கினார். அந்த ரெயிலில் பயணிகள் பயணம் செய்வதை படத்தில் காணலாம்.

### வடசென்னை பகுதி மக்கள்

# மீனம்பாக்கம் விமான நிலையத்துக்கு 60 நிமிடங்களில் செல்ல முடியும்

## தினமும் 2 லட்சம் பேர் பயணம் செய்ய வாய்ப்பு

சென்னை, பிப். 14–

சென்னை மெட்ரோ ரெயில் நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:–

இரண்டு வழித்தடங்கள் மற்றும் 32 மெட்ரோ ரெயில் நிலையங்களுடன் மொத்தம் 45 கி.மீ. நீளத்திலான சென்னை மெட்ரோ ரெயில் திட்டம் –1 தற்போது இயக்கப்பட்டு வருகின்றது. வண்ணாரப்பேட்டை முதல் விமான நிலையம் வரையிலான வழித்தடம்–1 நீல வழித்தடமாகவும் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். சென்ட்ரல் மெட்ரோ முதல் பரங்கிமலை வரையிலான வழித்தடம்–2 பச்சை வழித்தடமாகவும் அழைக்கப்படுகிறது.

வண்ணாரப்பேட்டை முதல் விம்கோநகர் வரை 9.051 கி.மீ. தூரத்திலான கட்டம்–1ன் நீட்டிப்புத்திட்டம் தற்போது முடிவடைந்துள்ளது. புதிதாக துவக்கி வைக்கப்பட்ட 9.051 கி.மீ. தூரத்திலான சென்னை மெட்ரோ ரெயில் கட்டம்–1 நீட்டிப்பு திட்டம், 2 சுரங்கபாதை மற்றும் 5 உயர்த்தப்பட்ட மெட்ரோ ரெயில் நிலையங்களுடன் வடசென்னையின் மத்தியில் அமைந்துள்ளது. ரூ.3,770 கோடி மதிப்பீட்டிலான இத்திட்டத்திற்கு மத்திய அரசு, தமிழ்நாடு அரசு மற்றும் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை ஆகியவை நிதியுதவி அளிக்கின்றன.

தற்போது சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் கட்டம்–1, திட்டம் 54 கி.மீ. நீளத்திலும், 21 சுரங்கப்பாதை மற்றும் 18 உயர்த்தப்பட்ட மெட்ரோ ரெயில் நிலையங்களை கொண்டுள்ளது. வடசென்னை பயணிகள் சென்னை விமான நிலையத்தை 60 நிமிடங்களில் வந்தடைய முடியும். தொலைதூர ரெயில்களை புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ராமச்சந்திரன் மத்திய ரெயில் நிலையம் மற்றும் எழும்பூர் ரெயில் நிலையத்திலும்,



மோடி மெட்ரோ ரெயிலை கொடி அசைத்து தொடங்கி வைத்த காட்சி

புறநகர் மற்றும் துரித ரெயில் போக்குவரத்து ரெயில்களை பூங்கா மற்றும் பூங்காநகர் ரெயில் நிலையங்களிலும், தொலைதூர பேருந்துகளை கோயம்பேட்டில் உள்ள சென்னை புறநகர் பேருந்து நிலையத்திலும், மாநகரப் போக்குவரத்து பேருந்துகளை பல்வேறு இடங்களிலும் ஒருங்கிணைக்கும் வகையில், சென்னை மெட்ரோ ரெயில் திட்டம்– கட்டம்–1 வடிவமைக்கப்பட்டுள்ளது.

கட்டம்–1ன் நீட்டிப்பிலும் டோல்கேட் மற்றும் திருவொற்றியூர் உயர்த்தப்பட்ட மெட்ரோ ரெயில் நிலையங்கள் மாநகரப் போக்குவரத்து பேருந்து முனையங்களுடன், வாகன நிறுத்தம் மற்றும் நடைபாதைகளுடன் சிரமம் இன்றி பயணம் செய்யும் வகையில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

மேற்கண்ட நடவடிக்கைகளினால் கரிய அமில வாயுவின் அளவு 30198 டன் குறையும். சென்னை மெட்ரோ ரெயிலின் இந்த வழித்தடத்தில் ஒவ்வொரு நாளும் சுமார் 2 லட்சம் மக்கள் பயணம் செய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த திட்டம் தேசிய உட் கட்டமைப்பு தொடர் திட்டத்தின் ஒரு பகுதி ஆகும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பெண்கள் கூட்டம் அலை மோதியது

நேரு ஸ்டேடியத்தில் பிரதமர் மோடி பங்கேற்ற நிகழ்ச்சியில் பெண்கள் அதிக அளவில் கலந்து கொண்டனர். ஸ்டேடியத்தின் உள்ளே மேல் இருக்கைகளில் பெண்கள் கூட்டம் நிரம்பி வழந்தது.

## மோடி–எடப்பாடி பழனிசாமி வாழ்க

நேரு ஸ்டேடியத்தில் நடந்த விழாவில் பங்கேற்ற இளைஞர்கள் சிலர் வரிசையாக அணிவகுத்து நின்ற னர். மோடி வாழக, எடப்பாடி பழனிசாமி வாழ்க, ஓ.பன்னீர்செல்வம் வாழ்க என்கிற எழுத்துக்கள் பொறிக் கப்பட்ட பனியன்களை அவர்கள் அணிந்து இருந்தனர். ஒவ்வொருவரும் அணிந்திருந்த பனியனில் ஒவ்வொரு எழுத்து மட்டும் பொறிக்கப்பட்டு இருந்தது. ஒரே வரிசையில் நின்றபடி இவர்கள் வரவேற்பு அளித்தனர்.

## கைகொடுத்த மெட்ரோ ரெயில் பயணம்

பிரதமர் வருகையையொட்டி பெரியமேடு, சென்ட்ரல் ரெயில் பகுதிகளுக்கு யாரும் செல்ல முடியாத அளவுக்கு போக்குவரத்தில் மாற்றம் செய்யப்பட்டு இருந்தது. இதனால் சென்ட்ரல் ரெயில் நிலையம் மற்றும் அதனை சுற்றியுள்ள இடங்களுக்கு செல்ல முடியாமல் பலர் மிகவும் சிரமப்பட்டனர். அந்த பகுதிகளுக்கு செல்ல முற்பட்டவர்கள் ஆங்காங்கே தடுத்து நிறுத்தப்பட்டனர். வடசென்னை பகுதியில் இருந்து இதுபோன்று வந்தவர்களே அதிகம் பாதிக்கப்பட்டனர். இவர்கள் தென் சென்னை உள்ளிட்ட பகுதிகளுக்கு செல்வதற்கு மெட்ரோ ரெயிலை அதிகமாக பயன்படுத்தினர். இதனால் சென்னை வாசிகளுக்கு இன்று மெட்ரோ ரெயில் பயணம் அதிகளவில் கைகொடுத்தது.